நாள்.23.02.2026
அசல் வழக்கு எண். 93/2019
பி.வா. சா.2
பெயர். திருஞான சம்மந்தம்
சாட்சி சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்
குறுக்கு விசாரணை

நான் முகவராக பணியேற்று 6 மாத காலம் ஆகிறது. நான் அழைப்பாணை ஏற்பட்ட பிறகு எங்கள் அலுவலக கோப்புகளை பார்வையிட்டேன் என்றால் சரிதான். நான் வழக்கு சொத்தை ஸ்தல பார்வை செய்யவில்லை. அதனால் தபசில் சொத்தின் அமைவிடத்தை சரியாக எனக்கு சொல்ல தெரியாது என்றால் சரிதான். வழக்கு வாதி எங்கள் மடத்தின் கீழ் குத்தகைதாரர் என்ற முறையில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். வழக்கு சொத்து சர்வே எண் 7/3 ல் உள்ளது என்றால் சரிதான்.

முகமது உசேன் என்பவரின் வீடும் சர்வே எண் 7/3 ல் உள்ளது என்றால் சரிதான். முகமது உசேன் வீட்டிற்கு தென்புறம் தென்வடல் ரோடு உள்ளது என்றால் எனக்கு ஞாபகமில்லை. முகமது உசேன் வீட்டிற்கு தென்பக்கம் கிழமேல் தெரு உள்ளதா என்றால் எனக்கு திசை தெரியவில்லை அதனால் சொல்ல இயலவில்லை. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ 4,5 02.05.1987 ல் எங்கள் அலுவலகத்தால் வழங்கப்பட்டது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ 7 15.08.1994 ல் எங்கள் அலுவலகத்தால் வழங்கப்பட்டது என்றால் சரிதான்.

என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ 8 07.07.1999 மின்சார இணைப்பு வழங்க ஆட்சேபனை இல்லை என கடிதம் எங்கள் அலுவலகத்தால் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியால் இதே வழக்கு சொத்து சம்மந்தமாக 3/2008 வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. சொத்தின் அமைப்புகள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். சர்வே எண் 7/3 ல் முகமது உசேன், சுல்தான் ஷெரிப் , மல்காமா ஆகியோர்கள் அனுபவத்தில் உள்ளதாக எங்கள் அலுவலக கோப்புகளில் துலங்கும் என்றால் சரிதான்.

பிரதிவாதிகள் தரப்பு கூடுதல் சாட்சியத்திற்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.